நல்லூர் ... யாழ்ப்பாணம்

Registered as a Newspaper — [illegible] 04 — விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — மக்கள் தினசரி — Peoples Daily

நாதம் 04 — திருவள்ளுவர் ஆண்டு 2024 — மார்கழி 28 — (12-01-1994) — புதன்கிழமை — ஓசை 328

## இலங்கைத் தமிழர் சார்பாக டென்மார்க் மந்திரிமீது வழக்கு

முன்னாள் டென்மார்க் நீதி அமைச்சர் எறிக்றின் ஹட்சனுக்கு எதிராக, இலங்கைத் தமிழ் அகதிகள் தமது குடும்பங்களுடன் இணைவதற்கு தடைவிதித்தது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றை தள்ளுபடி செய்ய, டென்மார்க் நீதிமன்றம் ஒன்று மறுத்துள்ளது. இந்த முன்னாள் அமைச்சருக்கு எதிரான குற்றப் பத்திரிகையை விசாரிப்பதற்கு 105 எதிர் 45வாக்குளால் கடந்த ஜூன் மாதம் பாராளு மன்றம் தீர்மானம் எடுத்திருந்தது. இப்போது எறிக் டென்மார்க் பாராளுமன்றத்தில் ஒரு சாதாரண உறுப்பினராக உள்ளார். கடந்த 83 வருடங்களில் டென்மார்க்கில் பாராளுமன்றம் விசாரணைக்கு எடுத்துக் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகைக்கு இராணுவ ரகசியங்களை வழங்குவோர் மீது கடும் நடவடிக்கை!

## தளபதி ஜெரி டி சில்வா எச்சரிக்கை

(கொழும்பு)

**இராணுவ இரகசியங்கள் பத்திரிகைகளுக்குக் கிடைக்கக் கூடாது என்றும், இராணுவம் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளுக்கு ஓர் ஒழுங்குமுறையிலான வகையிலேயே வழங்கப்படவேண்டும் எனவும் இதனை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா எச்சரித்துள்ளார்.**

இது குறித்து சண்டே ரைம்ஸ் தெரிவிக்கையில் லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பதவி ஏற்றதும்செய்த முதல் வேலை இராணுவத் தளபதியின் செயலகத்தில் தனியாக இயங்கிய தொடர்புப் பிரிவை உபயோகமற்றதென மூடியதாகும். பதிலாக இராணுவம் மற்றும் யுத்தம் பற்றிய செய்திகளை பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமைச் செயலகமே கையாளும்.

வெற்றிக்கு 'நானே' காரணம் என்று கூறுவதை ஏற்க முடியாது 'நான்' என்ற சொல்லுக்கு பதிலாக 'நாம்' என்ற பதம் சேர்க்கப்பட வேண்டும் இது நானே செய்தேன் என்ற போக்கை இல்லா தொழிக்கும் என்றும் புதியதளபதி கூறியுள்ளார்.

இராணுவத் தலைமைப் பீடத்தில் மாற்றங்கள் செய்யப்படுவதுடன் வடக்கு கிழக்கு கட்டமைப்பு பீடத்திலும் மாற்றங்கள் செய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். இத்தகைய இராணுவ கட்டமைப்பு மாற்றம் ஜனாதிபதி விஜேதுங்கவின் பொறுப்பிலுள்ள பாதுகாப்புத்துறையை கவனித்துவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் கலந்து பேசியே நடைபெறுவதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதே வேளை பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமைச் செயலகத்தின் உத்தியோகபூர்வப் பேச்சாளரான பிரிகேடியர் கெமுனு குலதுங்கா பதவி ஏற்கவுள்ளார். முன்பு இப் பதவியை வகித்த பிரிகேடியர் நளின் அங்கமன இராணு

## விமானப்படைஉயர்பீடத்தில் விரைவில் பாரிய மாற்றம்

(கொழும்பு)

தற்போது விமானப்படையின் அதிகாரிகள் நிலை தலைவராக இருக்கும் எயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் எம். ரணசிங்க பெப்ரவரி 17ஆம் திகதிமுதல் சிறிலங்கா விமானப்படையின் புதிய தளபதியாக நியமிக்கப்படவுள்ளார். இந் நியமனத்தோடு அவர் எயர் மார்ஷலாகவும் பதவி உயர்வு பெறுகிறார்.

தற்போதைய விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்த்தனா பெப்ரவரி 10இல் ஓய்வு பெறுகிறார். விமானப்படை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்த எயர் கொமடோர் அன்சல்ம் பீரிஸ் புதிய அதிகாரிகள் தலைவராகவும் வடபிராந்திய விமானப் படைத் தளபதியாக இருந்த விங்கொமாண்டர் ஜெயலத் வீரக்கொடி புதிய விமானப் படை நடவடிக்கைகள் இயக்குனராகவும் பதவி உயர்வு பெறுகின்றனர்.

## விமானப் படையை அழிக்க விடுதலைப் புலிகள் திட்டம்

### ஐலண்ட் பத்திரிகை தகவல்

சிறிலங்கா விமானப்படையை அழிக்க விடுதலைப் புலிகள் திட்டமிடுவதாகவும் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் போன்றவற்றின் உதவியுடன் விமானப்படைக்கு எதிராக தம்மைப்பலப்படுத்திக்கொள்ளலாம் எனவும் இராணுவ ஆய்வாளர் கூறியுள்ளனர்.

இத்தகவலை வெளியிட்ட ஐலண்ட் பத்திரிகை புதிய விமானப் படைத்தளபதி புலிகளை மேலும் விரிவாக்க முயற்சிகளை எடுப்பார் எனவும் சுமார் 14,000 பேரைக் கொண்ட விமானப்படையை இதற்கெனப் பயன்படுத்துவார் எனவும் தெரிவித்தது.

கடந்த இரு வருடங்களில் கடற்படைக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ள புலிகள், விமானப்படைக்குமுகம் கொடுக்கத் தயாராகலாம் எனவும் அது மேலும் தெரி

## தாய்லாந்து தூதுவராக முன்னாள் ராணுவ தளபதி?

ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சிசில்வைத்தியரட்னா தாய்லாந்துக்கான சிறிலங்காத் தூதுவராக நிய

கூறப்படுகிறது. கடந்த 4-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று அவர் வெளிவிவகார

## கிழக்கு தேர்தலில் போட்டியிடுமாறுநிர்ப்பந்தம்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுமாறு சிலர் நிர்ப்பந்திக்கப்பட்டு வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் சிறிலங்கா ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே கடந்த ஒரு வாரத்தில் இரு வேட்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தேர்தலில் பங்குபற்றமுனையும் ஏனையவர்க்கு எச்சரிக்கை இவர்களருகில் காணப்பட்ட பிரசுரங்களில் இருந்தது எனவும் தேர்தலில் பங்குபற்றுபவர்கள் தேசத் துரோகிகளாக கணிக்கப்படுவர் என்ற சுவரொட்டியும் இப்போது காணப்படுகிறது எனவும் பி.பி.ஸி. தெரிவித்தது

அரசுக்கு ஆதரவான (4ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டை வர்த்தகரிடம் 3 லட்சம் ரூபா கொள்ளை

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர் ஒருவரை கத்தியால் குத்திவிட்டு அவரிடமிருந்து 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை றெக்கிளமேசன் வீதியில் சொந்தமாக வியாபாரம் செய்யும் வி. இராமையா என்பவரே கத்தியால் குத்தப்பட்டு பணத்தை பறி கொடுத்தவராவார். இவர் தற்போது கத்திக்குத்துக் காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

## படையினர் அட்டகாசம்

இத்தகவலை வெளியிட்ட ஐலண்ட் பத்திரிகை புதிய விமானப் படைத்தளபதி புலிகளுக்கு எதிரான நடவடிக்கள், விமானப்படைக்கு முகம் கொடுக்கத் தயாராகலாம் எனவும் அது மேலும் தெரிவித்தது.

யரட்னா தாய்லாந்துக்கான சிறிலங்காத் தூதுவராக நியமிக்கப்படலாம் என்றும் அவர் அப் பதவியை ஏற்க தயாராக இருப்பதாகவும் ... யன்று அவர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இது சம்பந்தமாக அவருக்கு விவரிக்கப்பட்டுள்ளது.

பதவியை வகித்த பிரிகேடியர் நளின் அங்கமன இராணுவச் செயலாளர் பதவிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## கடற்படையினரின் சூட்டிற்கு மீனவரின் படகு சேதம்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மீனவர் ஒருவரின் படகு ஒன்று சேதமானது. இப் படகில் சென்ற மீனவர்கள் இருவர் கடலில் குதித்து கரை சேர்ந்தனர்.

காங்கேசன்துறையில் இருந்து கட்டைக்காடு நோக்கி நேற்றுக்காலை 8-35 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒலிபரப்பு அமைச்சர் காரில் போலி இலக்கத்தகடு

(கொழும்பு)

தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னான்டோவின் காரில் போலியான இலக்கத்தகடு பொருந்தியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது இவரின் பென்ஸ் காரில் 18-7001 என்ற இலக்கம் காணப்பட்டது. ஆனால் இப்படியான எந்த இலக்கமும் தமது பதிவில் இல்லையென மோட்டார் வாகன திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுவரை 18-6520 வரையிலான இலக்கமே வழங்கப்பட்டுள்ளதாக அத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் டிரோன் பெர்னான்டோ இந்த இலக்கம் இன்னும் பதிவுசெய்யப்படாதது. இது பட்டறை இலக்கமே. எனது அதிர்ஷ்ட எண் ஏழு எனவே ஏழில் தொடங்கும் இலக்கத்தை நான் பொருத்தியிருந்தேன் பதிவிலக்கம் வரும் வரையில் இவ்விலக்கத்தையே பாவிப்பேன் என அவர் கூறினார்.

## இராணுவ, கடற்படையினருக்கு கடற்புலிகள் பெரும் அச்சுறுத்தல்

### கொழும்பு பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் இப்போது வடக்கிலுள்ள சிறிலங்கா கடற்படை நிலைகளை மட்டுமல்ல இராணுவ நிலைகளைக் கூட அச்சுறுத்தும் ஒன்றாக மாறிவிட்டனர்'' இவ்வாறு கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டு கடனீரேரியில் பொது மக்களினதும் புலிகளினதும் படகுச் சேவைகளை சிறிலங்கா கடற்படை தாக்க ஆரம்பித்ததும் புலிகள் அமைப்பின் உயர்பீடம் விசேட கடற்புலிகள் அமைப்பை உருவாக்கியது. இது இன்று வடக்கிலுள்ள கடற்படை, இராணுவ நிலைகளுக்கு ஆபத்தான ஒன்றாகிவிட்டது என அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## புத்தளம் மீனவர் மீது தாக்குதல் நால்வர் பலி; ஆறுபேர் படுகாயம்

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் சிங்கள மீனவர் மீது நேற்று இனம் தெரியாதோரால் நடாத்தப்பட்ட தாக்குதலில் நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டனர். ஆறுபேர் காயமடைந்தனர்.

புத்தளத்துக்கு அருகே கதிரமலைப் பகுதியில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் அப்போது படகுகளிலிருந்த 18 மீனவர்களில் நால்வர் கொல்லப்பட்டதாகவும் ஆறுபேர் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## மட்டக்களப்பில் படையினர் அட்டகாசம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரின் அட்டகாசம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நெடியவத்தைப் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் இளம் பெண் உட்பட மூன்று தமிழர்கள் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் இவர்களுக்குச் சொந்தமான மூன்று வீடுகள் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் படையினரின் அட்டகாசம் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## மாற்றத்திற்கேற்ப புலிகள் தம்மை மாற்றுகின்றனர்

(கொழும்பு)

இராணுவத் தலைமையில் மாற்றம் ஏற்பட்டபின் கட்டமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களை விடுதலைப்புலிகள் நன்கறிந்துள்ளனர். அவர்களும் தமது நடவடிக்கைகளை மாற்றியமைத்து வருகின்றனர். இவ்வாறு சண்டே ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கடந்த மூன்று மாதகாலமாக விடுதலைப் புலிகள் தமது இராணுவ நடவடிக்கை மூலம் பெற்ற வெற்றிகளையும் அனுபவத்தையும் கொண்டு தமது கட்டளைப் பீடத்திலும் தொடர்பு கட்டமைப்பிலும் மாற்றங்கள் செய்துவருவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அப்பத்திரிகை மேலும் குறிப்பிடுகையில் அரசாங்கம் இச் சந்தர்ப்பத்தில் அரசியல் - இராணுவரீதியில் ஒரே சமயத்தில் தொழிற்படக்கூடிய வகையில் தமது மூலோபாயங்களையும் நிகழ்ச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய எம். ஐ-17 ரக ஹெலிகள் விரைவில் விமானப்படைக்கு கிடைக்கும்

(கொழும்பு)

சோவியத் தயாரிப்பான புதிய எம் ஐ-17 ரக ஹெலிகப்டர்கள் இன்னும் சில தினங்களில் சிறிலங்கா விமானப்படைக்கு கிடைக்கவுள்ளது. இராணுவ போக்குவரத்து ஹெலிகப்டரான இவற்றை கொள்வனவு செய்ய சிறிலங்கா விமானப் படையில் உயர்மட்டம் இறுதி முடிவு எடுத்துள்ளது.

சிறிலங்கா விமானப்படை தற்போது மூன்று எம். ஐ-17 ரக ஹெலிகப்டர்களை படையினரை ஏற்றிச் செல்லவும் விநியோகங்கள் மேற்கொள்ளவும் பயன்படுத்தி வருகிறது. இவை 4 5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு பெறப்பட்டவை. புதிதாக வாங்கப்படவுள்ளவை குறைந்தளவு விலையிலேயே பெற்றுக் கொள்ளப்படும் என விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலதிக எம். ஐ-17 ரக ஹெலிகப்டர்கள் கொள்வனவு குறித்து விமானப் படை உயர்மட்டத்தில் எவ்வித கருத்துவேறுபாடும் இல்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## செஞ்சிலுவைப் பிரதிநிதி விஜயம்

(நமது நிருபர்)

வலி வடக்கில் சிறிலங்கா இராணுவப்பிடிக்குள் சிக்கியுள்ள பொதுமக்களைப் பார்வையிடுவதற்கென சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி செல்விசன்றின் அப்பகுதிக்கு விஜயம் செய்கின்றார்.

## வை-8 விமானங்களை வாங்க விமானப்படையினர் பின்னடிப்பு

### பேச்சுவார்த்தைக்கு சீன இராணுவக் குழு வருகிறது

(கொழும்பு)

சீனத் தயாரிப்பான வை-8 விமானம் நல்ல நிலையில் இல்லாது பழைய ரகமாக காணப்படுவதால் அவ் விமானங்களை கொள்வனவு செய்ய சிறிலங்கா விமானப் படை மறுத்துள்ளது. இதையடுத்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவென சீன இராணுவ தூதுக் குழு ஒன்று விரைவில் கொழும்பு வரவுள்ளது. 96 இருக்கை கொண்ட இந்த ரக விமானம் பழைய ரகமாக இருப்பதே விமானப்படையினரின் நிராகரிப்பிற்கு காரணம் என சண்டே ஐலண்ட் பத்திரிகை கூறுகிறது.

இந்த முடிவு குறித்து அடுத்த மாதம் ஓய்வுபெறவுள்ள விமானப்படைத் தளபதி எயர்வைஸ்மார்ஷல் ரெரன்ஸ் குணவர்தனா கவலை வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா விமானப் படை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### உணவு சேவை யாழ்நகர்

மதிய உணவு-மீன், இறைச்சி, மரக்கறி (11.30-2.00) சூப்வகை-மரக்கறி மாமிசம் விசேஷ உணவு - புரியாணி, நூடில்ஸ், பிறைட்றையிஸ் பரிமாறும் சேவை வழங்கப்படும் ஓடர்களுக்கு நாட வேண்டிய முகவரி ''காருண்ணியா சையினிஸ் ஹொட்டேல்'' 166B, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(7168)

### வெளி வந்து விட்டது

முதுகவிஞர் அல்லை ஆறுமுகம் (ஈழமாஜினி) அவர்களின் ''பக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக்கச்சேரி'' (கவிதைத் தொகுதி) யாழ் நகரிலும், திருநெல்வேலி, கொக்குவில், இணுவில் சுண்ணாகம் போன்ற ஏனைய சிறுநகர்களிலும், பத்திரிகை சஞ்சிகைகள், விற்கும் புத்தகக்கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபாய் 50/- மட்டுமே. (7198)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன்/மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம்.

(7199)

### மலைவேம்பு ஏல விற்பனை

யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன்ஆலயமுன்றலில் தறிக்கப்பட்ட மலைவேம்பும் அதனது கொப்புகளும் (ஏறக்குறைய 40 கனஅடி மரம்) ஏல விற்பனைக்குண்டு. ஏலவிற்பனை தொகுதி தொகுதியாக மேற்கொள்ளப்படலாம்.

ஏலவிற்பனை 94-01-15 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். மரம் வாங்குபவர்கள் அன்றே அதன்

# வெள்ளிபாளம் கடத்தல் இராணுவ கோப்ரல் கைது

(புத்தளம்)

இரண்டரைக்கோடி ரூபா பெறுமதியான வெள்ளிப் பாளங்கள் கடத்தல் தொடர்பாக இரு இராணுவ பொலிஸ் கோப்ரல் மற்றும் சீன நாட்டவர் ஒருவர் உட்பட பதினொரு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு மூவாயிரம் கிலோ கிராம் நிறையுடைய வெள்ளிப்பாளங்களை புத்தளம் பொலிசார் கடல் கரையிலிருந்து மீட்டுள்ளனர். இதன் பெறுமதி இரண்டரை கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 31 வெள்ளிப் பாளங்கள் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட போது கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாகவே சிறிலங்காவின் இரு இராணுவப் பொலிஸ் கோப்ரல்கள், ஒரு சீனதேசத்தவர் உட்பட பதினொரு பேரை புத்தளம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபர்கள் நீர்கொழும்பு சுங்க அதிகாரிகளிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தெற்குவலய பாட சிறப்பலுவலர்கள் முதன்மை ஆசிரியர்களுக்கான கல்வி அபிவிருத்தித் திட்டமிடல் அமர்வு இன்று புதன் கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே இவ்வலயத்தைச் சேர்ந்தவர்கள் இதில்தவறாது கலந்து கொள்ளும்படியும் யாழ்ப்பாணம் வலயம்-1 வலயக் கல்விப் பணிப் பாளர் செல்வி தி. பெரியதம்பி கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

### வகுப்புகள் ஆரம்பம்

(தொல்புரம்)

சண்டிலிப்பாய் மாகியம்பதி மேஜர் முரளி கல்வி வளர்ச்சிக் கழகத்தில் நடப்பு ஆண்டிற்கான புதிய இலவச பாட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் மேற்படி கழகத்தில் பகல் நேர கல்வி வகுப்புக்களும், இரவு நேர மீட்டல் (சுயகல்வி) வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன. மேற்படி இலவச கல்விச் சேவை வகுப்புக்களில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் கழகப் பொறுப்பாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (41)

### சுற்று நிருபம் தாமதம்

(தொல்புரம்)

மாணவத் தாதிகள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரும் சுற்று நிருபம் ஒன்று யாழ். மாவட்டத்திற்கு மிகவும் தாமதமாகக் கிடைத்

## விக்னா

கல்வி நிறுவனம்

வர்த்தகம்

❋ திரு. தேவா

93 பரீட்சையில் தோற்றியவர்களுக்கு

மீட்டல்

Sat, Sun 10.00-11.00 12.30-1.30

❋ ஆரம்பம்: 15 01-94

(சி-8348)

## பாரதி

சித்தன்கேணி

SPOKEN ENGLISH

by

BRITTO

புதிய பிரிவு—ஆரம்பம்

13-1-94 வியாழன்- 12-30

(சி-8350)

## விக்னா

கல்வி

## இலவச பயிற்சி வகுப்புகள்

குடாநாட்டில் சுயதொழில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக தேசிய சர்வோதயத்தினால் இலவச தையல் பயிற்சி, சிகை அழகு அலங்கரிப்பு பயிற்சி, பூக்கள் தயாரிப்பு, கேக் ஐசிங் செய்தல் போன்ற பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

## எமது புதிய வெளியீடுகள்

ரஜனி - பாரதி

❋ செல்லப்பிள்ளை

அத்துடன்

1) சின்னவிழிகள் (வீடியோப்படம்)
2) போரம்மா (புலோப்பளைச்சமர்)
3) ஒளிவீச்சு (பூநகரி சமர்)

விரைவில் எதிர்பாருங்கள்;

★ ஒப்பறேசன் தவளை (நேரடி ஒளிப்பதிவு)

### குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-8351)

## லொறிக் கொள்வனவு கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு நல்ல நிலையில் உள்ள ஒரு லொறி தேவைப்படுகிறது. இசுசு/டாடா பென்ஸ் ரக லொறிகளை விற்பனை செய்ய விரும்புவோர் லொறியின் தரம், ரகம், விலை, என்பன அடங்கிய விபரங்களை பொதுமுகாமையாளர், பனை, தென்னை, வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பளை, என்ற முகவரிக்கு 25-01-94க்கு முன் எழுத்து மூலம் அனுப்பிவைக்கவும்.

கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''லொறி கூறுவிலை'' எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

நன்றி.

தலைவர் பொதுமுகாமையாளர்

பளை- பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - பளை

(7197)

## கண்ணீர் அஞ்சலி

எமது சமாச உபதலைவர் திரு. சின்னையா தவரட்ணம் அவர்களது அன்னை 12-12-93-ம் திகதி மரணமானதையிட்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதா

## ஈழநாதம் 4-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

❋ சிறுகதை ❋ கவிதை

### போட்டிகளில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல்வேண்டும்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஆக்கங்கள் இதற்குமுன் பிரசுரமானதாகவோ, வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.
- போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும்''ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

ஆசிரியர்,
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

## நினைவு கூருகின்றோம்..

1994-01-12

பெறும். மரம் வாங்குபவர்கள் அன்றே அதன் பெறுமதிப்பணத்தினைக் கட்ட வேண்டும். கொள்வனவு செய்யும் மரத்தினை 1994-01-16ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு முன் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும். தறித்த மரத்தினை அலுவலக நேரத்தில் பார்வை இடலாம்.

யாழ். பல்கலைக்கழக
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய
மஞ்சத் திருப்பணிச்சபை
(சி-8343)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை,
பட்டப்பின் டிப்ளோமா ஆங்கிலம் | டிப்ளோமா ஆங்கிலம் பரீட்சைகள்-1994

மேற்படி பரீட்சைக்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைப் பரீட்சைக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து ஒரு பாடத்திற்கு 50/-ரூபா வீதம் சிறாப்பரின் கரும பீடத்தில் செலுத்தி பற்றுச் சீட்டுடன் விண்ணப்பங்களை ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னதாகப் பரீட்சைக்கிளையில் சமர்ப்பிக்கவும். பரீட்சைகள் ஜனவரி 26ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெறும்.

-பதிவாளர்
(சி-8329)

யாழ். மாவட்டத்திற்கு மிகவும் தாமதமாகக் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது.

இதுபற்றி தெரிய வருவதாவது: சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களிடமிருந்து மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரும் இச்சுற்று நிருபம் காலம் தாழ்த்தி கிடைக்கப் பெற்றுள்ளதால் விண்ணப்பிக்கத்தகுதியுடையபலர் ஏமாற்றம் அடைந்துள்ளனர் எனவும், இதற்கான விண்ணப்ப முடிவு திகதி கடந்த ஆண்டு மார்கழி 31ஆம் திகதி எனவும் சுகாதார வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. (41)

## பொங்கல் விழா
(தொல்புரம்)

தொல்புரம் நட்புறவுக் கழகத்தினால் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் கோவில் முன்றலில் பொங்கல் விழா நடாத்தப்படவுள்ளது. இவ் விழாவில் சிறப்புரைகள், கவியரங்கம், சிறுவர் நிகழ்ச்சிகளும், ''ஆனந்தசுதந்திரம்,, ,, கலிங்கத்துப்பரணி'' எனும் இரு சமூக நாடகங்களும் மேடையேறவுள்ளன. (41)

## உடற்பயிற்சி நிகழ்ச்சி
(பருத்தித்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர்பிரிவு பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கம் பாலர்பாடசாலை உடற்பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தி பாலர் பாடசாலைப் பாலர்களுக்குப் பரிசில்களையும் வழங்கியது. இவ்விழா வட இந்து மகளிர் கல்லூரியில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவு பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கத்தலைவி செல்வி கௌரி கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது. (25)

கல்வி
நிறுவனம்
93 பரீட்சையில்
தோற்றியவர்களுக்கு
மீட்டல்
DAY CLASSES

வர்த்தகம்
திரு. வரதன்
MON - 10 - 12
TUE, THU - 1-2
FRI 10-11

அளவையியல்
திரு.
A. பிரபாகரன்

TUE, THU 12 - 1.00
FRI 11 - 1.00

(சி-8347)

## விக்னா
## கல்வி நிறுவனம்
பொருளியல்
திரு.கலாகரன்
93 பரீட்சையில்
தோற்றியவர்களுக்கு
மீட்டல்
94 DAY CLASSES
TUE,THU,FRI (8-00-10-00
(10-00 - 12-00)
94 Sat, Sun
(11-00 - 12-30)
95 Sat, Sun
(12-30 - 2-00)

ஃ ஒவ்வோர் பாடஅலகும் கடந்த கால வினா விடைகளுடன் செய்யப்படும்.

(சி-8349)

பிரார்த்திப்பதுடன், அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்சபை, ஊழியர்கள்.
வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
201, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(7194)

## 63-ம் நாள் நினைவு தினமும்
## வீட்டுக் கிருத்தியமும்



பிறப்பு
02 02 1973

இறப்பு
11-11-1993

### பாலசிங்கம் கௌரி
(பண்ணாகம், சுழிபுரம்)

63 நாட்கள் என்ன, 63 வருடங்கள் ஆனாலும் உன் நினைவலைகள் எம்மனதை விட்டு அகலாது. எம் மகளின் மரணத்துயரத்தில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுர மூலம் துயரத்தை வெளிப்படுத்திய மன்றங்கள், சங்கங்கள் யாவற்றுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

– குடும்பத்தினர்.

தெட்சணாமூர்த்தி,
இலங்கை மின்சாரசபை. (7180)

## 1994-01-12

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-நீர்வேலிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெயந்தன் - பேபிஅருணா** (செல்லச்சாமி தணிகேசன் - ராசவீதி, கல்வியங்காடு-யாழ்)

1989ஆம் ஆண்டு திருக்கோணமலை-மூதூர், முட்டுச்சேனைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சின்னவன்** (தம்பிராசா கனகரத்தினம்-பூநகர் திருக்கோணமலை)

1990ஆம் ஆண்டு யாழ்-கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினரால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட, நாட்டுப்பற்றாளரான,

**க. செல்வராசா சின்னத்துரை** (பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு-யாழ்)

1991ஆம் ஆண்டு யாழ்-பலாலி முகாமிலிருந்து குப்பிளான் பகுதி நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மதனி** (கமலநாயகி செல்வராசா-ஆலையடி வீதி-மட்டக்களப்பு)

1992ஆம் ஆண்டு வவுனியா-புளியங்குளம் - மன்னார் வீதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜெசிந்தன்-நாவுக்கரசன்** (துரைராசா கௌரி சங்கர்-மன்னார்வீதி-வவுனியா)

1993ஆம் ஆண்டு அம்பாறை-திருக்கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.கலாகாந்தன்-கவிதாஸ்** (முருகமூர்த்தி உதயகுமார்-தம்பிலுவில்-அம்பாறை)

**பத்மாகரன்-பத்மன்** (ஆறுமுகம் வடிவேல்-தம்பிலுவில்-அம்பாறை)

யாழ்-சாவகச்சேரி-மட்டுவில் யூனியன் கல்லூரியை அண்மித்த பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சின்போது அதிர்ச்சியுற்று உயிரிழந்த பெண்மணி,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.
(சி-8344)

நல்லூர் இன நூலகம்
மாநகர ... ம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

மாற்ற இயலாததை குறைகூறாதே; தாங்கிக் கொள். - புப்லியஸ் ஸைரஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# தார்மீகப் பொறுப்பு ஏற்கவேண்டியது யார்?

பூநகரி கூட்டுப்படைத் தளம் வீழ்ச்சி குறித்து இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவந்துள்ளது. எதிர்பார்த்ததை வீடவிரைவிலேயே வெளிவந்துவிட்டதாகக் கணிக்கப்படும் இவ் அறிக்கை எதிர்பார்த்ததுபோல் சர்ச்சையுடனேயே வெளிவந்துள்ளது என்றே கூறலாம்.

பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு குறித்து அப்போதைய இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா இராணுவ விசாரணைக் குழு ஒன்று நியமித்தபோதே அது குறித்து விமர்சனங்கள் எழுந்தன. இதற்கு தோல்விக்குக் காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டு வந்த இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா வினாலேயே விசாரணைக்குழு நியமிக்கப்பட்டமையும், அவருக்குக் கீழ் உள்ள அதிகாரிகளே விசாரணைக் குழுவில் இடம்பெற்றமையுமே காரணமாகும்.

இந்நிலையில், முன்னர் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிப்பவை போன்றே - சரியோ / பிழையோ- விசாரணைக் குழுவின் அறிக்கையானது புதிய குழப்பங்களையும், சர்ச்சைகளையும் உருவாக்கியுள்ளன. இக் குழப்பத்தில் முக்கியமானது, ஜனாதிபதியிடமோ, அன்றி தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவிடமோ விசாரணைக்குழு தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க முன், முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னாவிடம் சமர்ப்பித்ததாகும். அடுத்ததாக விசாரணைக்குழு பூநகரி படைத்தள வீழ்ச்சிக்கு வடபகுதி இராணுவத் தளபதி உட்பட 20 அதிகாரிகள் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டாகும்.

அதாவது, இராணுவ விசாரணைக்குழு முன்னாள் இராணுவத் தளபதியிடம் அறிக்கையை கையளித்தது சரியா, பிழையா என்பது குறித்து சர்ச்சைகள் நிலவுகின்றபோதிலும் இன்றைய நிலையில், முதலில் அறிக்கையை இக்குழு ஜனாதிபதியிடமோ அன்றி தற்போதைய இராணுவத் தளபதியிடமோ ஒப்படைத்திருக்க வேண்டும். ஏனெனில், சிசில் வைத்தியரெட்னா இராணுவத் தளபதி என்ற ரீதியில் இவ்விசாரணைக்கு உத்தரவு இட முடிந்ததே ஒழிய, சிசில் வைத்தியரெட்னா என்ற தனிப்பட்ட மனிதனின் தீர்மானமாக இதுஇருக்கவில்லை. அவ்வாறு ஓர் இராணுவ விசாரணைக்கு உத்தரவு இடவும் முடியாது.

இந்நிலையில், விசாரணைக்குழு தமது முடிவை முன்னாள் இராணுவத்தளபதியிடம் ஒப்படைத்தது தவறு

மேலைத்தேய இசை நடன

# ஆசிரியர்கள் நியமனம் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மேலைத்தேய இசை நடன ஆசிரியர்களும் சித்திர ஆசிரியர்களும் நியமிக்கப்படவுள்ளனர். கல்விச்சேவைகள் சபை தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் இவர்கள் நியமிக்கப்படுவர்.

தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்கள் மத்திய அல்லது மாகாண அரச சேவையில் நியமனம் பெறுவர். விண்ணப்பதாரிகள் இம்மாதம் 24ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

தகுதியுள்ள ஆண்கள் பெண்கள் செயலாளர், கல்விச் சேவை சபை, இசுறுபாய, பத்தரமுல்ல எனும்முகவரிக்கு இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் சகல மாவட்டங்களிலும் உள்ளன. பதவி வெற்றிடம் உள்ள மாவட்டத்தில் நிரந்தரமாக வதியும் விண்ணப்பதாரிக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 1993 டிசம்பர் மாதம் வெளியான வர்த்தமானியில் இதுகுறித்த விபரங்கள் வெளியாகியுள்ளன.

# கொழும்புத்துறைமுகத்தில் நெருக்கடி குறைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வருவதால் துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து மாற்று ஏற்பாடுகள் குறித்து துறைமுக அதிகார சபையினரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும் ஆராய்ந்துவருவதாக அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நெருக்கடியைத் தவிர்ப்பதற்கென யாழ்ப்பாணத்திற்கான பொருள்களை காலி அல்லது திருக்கோணமலை துறைமுகங்களிலிருந்து ஏற்றி வருவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

கொழும்பில் வெளிநாட்டு கப்பல்கள் பல நாட்கணக்கில் தரித்து நிற்க நேர்வதால் பெருமளவு பணத்தைக் கப்பல் கட்டணமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# 160 தடுப்புகாவல்கைதிகளை விடுதலை செய்ய சிபார்சு

(கொழும்பு)

தடுப்புக் காவலில் உள்ள கைதிகளின் நிலைவரங்களை ஆராய்ந்துவரும்மனிதஉரிமைகள் அமைப்பின் தலைவர் ஜே. எப். ஏ. சோஸா அவ்வாறுள்ள சுமார் 160 கைதிகளை விடுதலை செய்யுமாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிற்கு சிபார்சு செய்துள்ளார்.

இதன்படி தடுப்புக்காவலில் உள்ள அரசியல் கைதிகளில் ஒரு சிறுதொகையினர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் மகசின் சிறைச்சாலையிலும் களுத்துறைத் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிங்கள அரசியல் கைதிகள் ... மகர தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(சி)

## "ஏணி" வெளியீட்டு விழா

யா/ கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவர்களின் வெளியீடான ஏணி இதழ் இன்று புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. இந் நிகழ்வில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி (வலயம் 02) அவர்களும், கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களும், கல்லூரி பழையமாணவர்களும் கலந்துகொள்ள ...

# எலும்புக்கூடு விவகாரத்தில் எதிர்க் கட்சிக்கும் பங்குண்டு

(கொழும்பு)

தெற்கில் பயங்கர வாதத்திற்கு எதிராக யுத்தம் செய்ய அன்று சர்வ கட்சி மாநாட்டின் மூலம் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்திற்கு அனுமதி அளித்திருந்தன.

ஆனால் இன்றுபாரியமனித புதை குழிகளைக் கண்டு பிரமித்துப் போய் இருப்பதாக நவ சமசமாஜக் கட்சி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எதிர்க் கட்சிகளும், ஆளும் கட்சியும் கூட்டாக இணைந்தே இக் கொலைகளை செய்தார்கள். எனவே இன்று கண்டு பிடிக்கப்படும்எலும்புக் கூடுகள் தொடர்பாக கணிச நவசமசமாஜக் கட்சி மான பங்கை எதிர்க்கட்சிகளும் ஏற்க வேண்டும் எனவும் அக்கட்சி விடுத்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# மக்களின் நலன் கருதியே தொடர்ந்து செயற்படுவேன்

-தொண்டமான்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் தீர்க்கப்பட்டு விட்டன. இரு கட்சிகளுக்கிடையேயும் உறுதியான உறவுகள் நிலவுகின்றன: இவ்வாறு அமைச்சர் தொண்டமான் திங்களன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் என்னுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இரு அமைச்சர்களும் நடாத்திய பேச்சுக்களின் போது பெரும்பாலான கருத்து வேற்றுமைகள் தீர்க்கப்பட்டு விட்டன. நான் கொழும்பிற்கு வெளியே இருந்த படியால் ஜனாதிபதியைச் சந்திக்க முடியவில்லை ஆனால் வெகு விரைவில் அவரைச் சந்திக்கவுள்ளேன்.

எதிர்க்கட்சியுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி அமைச்சர் தொண்டமான் அவர்களிடம் கேட்கப்பட்டபோது அப்பேச்சுவார்த்தைகள், தான் மிகவும் ஆத்திரப்பட்ட நிலையில நடந்ததாகவும் அவற்றிற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட தேவையில்லை எனவும் தெரிவித்தார். அவர் மேலும் மாகாண சபைத்தேர்தலில் காமினி திஸாநாயக்காவை எதிர்த்ததாகவும் நம்பிக்கை இல்லாப் பிரேரணையின்போதுதான் அவரை ஆதரித்ததாகவும் எதிர்காலத்தில் மக்கள் நலன் கருதியே செயற்படப் போவதாகவும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

## 'புறப்படுங்கள் போருக்கு' தெருக் கூத்து

(யாழ்ப்பாணம்)

எம் மண்ணை கபளீகரம் செய்து மக்களை அடிமைகளாக்க முனைந்து நிற்கின்ற சிங்கள பேரின வாத கூலிப் படைகளை எல்லையில் வைத்தே துவம்சம் செய்து விரட்டி அடித்திட நடைபெற்று வரும் மண்மீட்புப் போரிலே அனைவரும் இணைந்து போராட வேண்டும் என்பதை விளக்கும் வகையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக தீவகப் பிரிவினரால் 'புறப்படுங்கள் போருக்கு' எனும் தெருக் கூத்து தற்போது பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றது. (22

## பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன

தொண்டமானாறு தெற்கு கெருடாவில் வடக்கு பகுதிகளில் கிராமிய உற்பத்திக் குழுவினர் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நூறு பயனாளிகளைத் தெரிவு செய்து பழமரக்கன்றுகளை வழங்கியுள்ளது. மாங்கன்றுகள், தேசிக் கன்றுகள் என்பன உட்பட பலவகை மரக்கன்றுகளும் இந்த வைபவத்தில் வழங்கப்பட்டன.

## 'பொய்க்கால்' நாடகம்

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் ''பொய்க்கால்'' நாடகம் குடாநாட்டின் பல இடங்களில் மேடை ஏறவுள்ளது. பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் நாளையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நாளை மறு ...

பொய்ச்சாட்சி சொன்னவருக்கு

# பருத்தித்துறை நீதிமன்றில் மூவாயிரம் ரூபா அபராதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சி சொன்னவருக்கு நீதிமன்றம் மூவாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

நீதிமன்றில் பொய்ச்சாட்சி சொன்ன வியாபாரிமூலையைச்சேர்ந்த மாணிக்கம் கனகரட்ணம் என்பவருக்கு எதிராக இக் குற்றத்திற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதியாளர்கள் அபராதம் விதித்தனர்.

மற்றும் அல்வாய் வடக்கைச்சேர்ந்த நவரத்தினம் நற்குணராசா சட்டவிரோதமாக 3 போத்தல் கசிப்பு, 50 போத்தல் கோடா மற்றும் உற்பத்திப் பொருள்கள் வைத்திருந்தவர் என்றபேரில் பருத்தித்துறை காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதியாளர்கள் 3 போத்தல் ... 45ஆயிரம் ரூபாவும், 50போத்தல் கோடா வைத்திருந்தமைக்காக ஒரு இலட்சம் ரூபாவும் அபராதம் விதித்தனர். (யோ)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பூட்டிய நிலையில்வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருட்டுப்போய்விட்டது அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது யாழ் பிரிவு சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவரான அ. றொபேட் என்பவருடைய 'ஈஸ்ரன்' சைக்கிளே திருட்டுப் போனது. அன்றைய தினம் இராசாவின் தோட்ட வீதியில் உள்ள உறவினர் வீடொன்றிற்கு புது வருட கொண்டாட்டத்திற்குச் சென்ற போது இச்சம்பவம் ...

கள் பலவத்தை, ம க சின், ... வுள்ளனர்.

... தினமும் மேடை ஏறவுள்ளது.

... நிதியாளர்கள் 3 போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்காக ... சென்ற போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (22)

என்றே கூற முடியும். ஆகையினால், இராணுவ விசாரணைக்குழு தமது தனிப்பட்ட விசுவாசத்தின் பேரிலேயே சிசிலிடம் விசாரணை அறிக்கையை முதலில் சமர்ப்பித்தது என்றே கூறலாம்.

இந்நிலையில், சிசில் மீது தமது விசுவாசத்தை வெளிக்காட்டியுள்ள இராணுவ விசாரணைக் குழுவின் தீர்ப்பும்கேள்விக்குரியதொன்றுஎன வாதிடுவதிலும்நியாயமுண்டு. ஆகையால், பூநகரிப்படைத்தள வீழ்ச்சிக்குஇராணுவத் தளபதி மீது குற்றச்சாட்டு எதையும் சுமத்தாது, வடபகுதித் தளபதிகள் மீது குற்றச்சாட்டைச் சுமத்துவது குறித்தும் சந்தேகங்கள் எழுவது தவிர்க்க முடியாதது ஆகும்.

ஆனால், விசாரணைக்குழு தெரிவித்திருப்பதுபோல் பூநகரிப் படைத்தளம் வீழ்ச்சிக்கு வடபகுதித் தலைமையே காரணமாக இருப்பினும், சிசில் வைத்தியரெட்னா "எவரோ செய்த தவறுக்கு நான் பொறுப்பேற்றுக் கொண்டேன்" எனக் கூறி, தனக்கும் தோல்விக்கும் சம்பந்தமில்லை எனக் கூறித் தப்பிவிட முடியாது. ஏனெனில், பூநகரிப் படைத்தளம் தகர்க்கப்பட்டது சிசில் வைத்தியரெட்னா பொறுப்பாக இருந்த காலப்பகுதியே ஆகும். ஆகையினால், அதற்குரிய தார்மீகப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஆகையினால் சிசிலின் பதவி விலகல் மக்களின் பாவச்சுமையைத் தனது தோளில் சுமந்த இயேசு பிரானின் அர்ப்பணிப்புடன் அவர் கூறுவதுபோல் ஒப்பிடக் கூடியது அல்ல.

ஆனால், சிசில் வைத்தியரெட்னா ஒன்றைக் கூறலாம்: தோல்விக்கு நான் மட்டும் பொறுப்பல்ல. தற்பொழுது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவில் இருந்து கள நிலை அதிகாரிகள் வரை சகலரும் பொறுப்பு எனக் கூறின், அது பொருத்தப்பாடாகும். ஏனெனில், இரண்டாம் கட்ட ஈழப்போரில் நீண்டகாலம் இராணுவத்திற்குத் தலைமை தாங்கியவரும், பூநகரியில் ஒரு படைத்தளம் உருவாவதற்குக் காரணமாக இருந்தவருமான ஜெனரல் ஹமில்டனில் இருந்து, களத்தில் தோல்வி கண்ட இராணுவ அதிகாரிகள் அனைவருமே பொறுப்பாகும் என வாதிவதில் நியாயமுண்டு.

அதாவது, பூநகரியில் இராணுவம் சந்தித்த தோல்விக்குத் தனியாக சிசிலையோ அன்றி வடபகுதி இராணுவத் தளபதியையோ குறைகூறுவதிலோ குற்றஞ்சாட்டுவதிலோ அர்த்தம் எதுவுமில்லை. அத்தோடு, சிசிலை மாத்திரம் பதவிவிலக வற்புறுத்தியதிலும் நியாயமில்லை. மாறாக, இராணுவத்தலைமைப்பீடம் முழுமையாக இராஜினாமா செய்திருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்ல, இவ்வளவு பெரிய உயிரிழப்பு ஏற்பட்டதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று அரசாங்கமே பதவி விலகியிருக்கவேண்டும். அதுவே சரியானதாகும்.

# சட்டவிரோத குடியேற்றக்காரர் கப்பல் கப்பலாக அனுப்பப்படுவர்

## - பிரான்ஸ் அறிவிப்பு

(பாரிஸ்)

பிரான்சில் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுவர் எனவும் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

குறிப்பாக ஆபிரிக்காவில் இருந்து பிரான்சில் குடியேறுபவர்கள் மீது நடவடிக்கை மிகக் கடுமையாக எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பிரச்சினை பற்றி உள்துறை அமைச்சர் கருத்துதெரிவிக்கையில், பிரான்சில் குடியேறுபவர்கள் கப்பல் கப்பலாக அனுப்பப்படுவர் எனவும் அதன்பிறகு இப் பிரச்சினையை உலகம்புரிந்துகொள்ளும் எனவும் தெரிவித்தார்.

# எந்தஊரில்என்னபேசினும் முக்கிய செய்தி ஆக்குகிறார்

## - வை. கோ. ஆதங்கம்

(சென்னை)

நான் எந்த ஊரில் என்ன பேசினாலும் எல்லாப் பத்திரிகைகளும் அதை பெரிய செய்தியாக வெளியிடுகின்றன. இது எனது உயர்வுக்கா அல்லது தாழ்வுக்கா என்பது தான் புரியவில்லை. இவ்வாறு தி. மு. கவிலிருந்து வெளியேற்றப் பட்ட வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

நீதி கேட்டு இரண்டாவது கட்ட சுற்றுப்பயணம் செய்து வரும் கோபாலசாமி தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலும், புதுக்கோட்டை மாவட்டம் மழையூரிலும் தி. மு. க, பிரமுகர்களின வீட்டில் திருமணங்களை நடத்தி வைத்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த சிறிய கிராமத்தில் நான் பேசும் போது கூட மத்திய மாநில உளவுப் படையினர் என்னை விவகாரத்தில் மாட்டிவிட வேண்டும் என்று இங்கே குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.

## ராவ் கோரிக்கை

மாறிவரும் சர்வதேச சூழ்நிலைக்கு ஏற்ப இந்தியாவும், சீனாவும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பங்காற்ற வேண்டுமென்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

# நேட்டோ விரிவாக்கம் உடன் சாத்தியப்படாது

## - பில் கிளிண்டன்

(பிரஸ்ஸல்ஸ்)

ஐரோப்பாவில் மேற்கு, கிழக்கு பிரிவுகள் என்று ஏற்படுவதை தவிர்க்க நேட்டோ நேச அணிகளின் உடனடி விரிவாக்கத்திற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் இல்லை என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

நேட்டோ அணி நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரஸ்ஸல்ஸ் வந்திருக்கும் அவர் அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது: உக்ரையினில் தற்போது இருக்கும் நெடும் தொலைவு அணு ஆயுதங்களை அழிப்பதான ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா ரஷ்யா மற்றும் உக்ரைன் அரசுகள் கணிசமான முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அமைதிக்கான கூட்டு முயற்சியில் பங்கேற்கவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோ அமைப்பில் ஒரு நாள் சேர்ந்து கொள்ளவும் முடியும் என்றும் உறுதி அளித்தார்.

தி. மு. கவை பிளக்க

# அ. தி மு. கவினால்ஏவப்பட்ட எடுபிடியாள் கோபாலசாமி

## - கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தி. மு. கவை பிளக்க பணம் கொடுத்து ஏவப்பட்ட அ. இ. அ. தி. மு. கவின் எடுபிடியாள் தான் வை. கோபாலசாமி என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

தி. மு. கவின் ஏடான முரசொலியில் கரிகாலன் பதில்கள் என்ற பகுதியில் வாசகர்களின் கேள்விக்கு பதிலளித்துள்ள மு. கருணாநிதி அதில் மேலும் குறிப்பிடுகையில், அவசரகால நிலைக்குப் பின்னர் 1980-ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியுடன் தி. மு. க தேர்தல் கூட்டணி அமைத்தபோது அந்தக் கூட்டணியை வரவேற்றுத்தான் வை. கோ. பேசிக்கொண்டிருந்தார். எனவே இவர் காங்கிரசை கசப்பான வேப்பங்காய் என்று வெறுத்து விட்டவர் எனக் காட்டுவது சரியானதல்ல. அதேவேளை தி. மு. கவுக்கும் காங்கிரசுக்கும் உறவு ஏற்பட்டிருப்பதாக இவர் பிரசாரம் செய்வது கலப்படமற்ற பொய் - பித்தலாட்டம். அதே மேடையில் இவர் தி. மு கவுக்கும் ஜெயலலிதாவுக்கும் உறவு என்று கூறுவது ஆளுங்கட்சியான அ. இ. மு. கவின் எடுபிடியாக செயற்படுவதை மறைப்பதற்காகக் கையாளும் கடைகெட்ட தந்திரம் என்றும் தெரிவித்துள்ளார்.

# இல. அகதிகள் முகாங்களில் தமிழக பொலிஸ் சோதனை

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் அகதிகள் முகாம்கள் மீது தமிழ்நாடு பொலிசார் திடீர் சோதனைகளை நடத்தியுள்ளனர். அப்போது தமிழக அரசின் பதிவேட்டிலுள்ள பெயர்களுடன் தங்கியிருந்த அகதிகளின் பெயர்களும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது.

இலங்கை தமிழ் அகதிகள் முகாம்களை விட்டு வெளியேறுவதற்கு, இந்திய அரசு தடை விதித்திருந்தமை தெரிந்ததே. மேலும் முகாம்களின் அருகேயுள்ள தமிழகப் பொலிஸ் நிலையங்கள் ஈழத் தமிழர் தொடர்பாக மிகுந்த அவதானமாக இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

**வனம் உண்டானால் - நம் நாடு வளம் ஆகி விடுமே.**

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்


**11 - 01 - 1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 180
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்
26-9186
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-3473, 40-2666, 42-3612, 24-7941, 24-5955, 27-0849, 26-3412, 40-7583, 24-5127, 28-9449, 22-3611, 42-1320, 26-8052.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

*(12-1-1994)*



மண்ணில்
அன்னையிடம்
11-12-1930

விண்ணில்
இறைவனிடம்
13-12-1993

திருமதி
**மங்களேஸ்வரி சச்சிதானந்தம்**
(முன்னாள் ஆசிரியர்)

அன்பிற்கு இலக்கணமாய்
பண்புடன் எமை வாழவைத்த
அன்புத் தெய்வமே அம்மா!
நீங்கள் என்றும் எங்கள் நெஞ்சில்
நீங்காத இடத்தில் இருப்பீர்கள்
விரதங்கள் பல இருந்தீர்
விநாயகனின் பாதம் சேர்ந்தீர்.

பாசமுடன் எங்களுடன் வாழ்ந்த எங்கள் குடும்பத் தலைவி 13-12-1993 (அன்று) இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் வருகைதந்தவர்களுக்கும் அனுதாபம்தெரிவித்தவர்களுக்கும்நன்றி தெரிவிப்பதோடு(12-1-94)புதன் கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
சகோதரி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
மங்களா குடும்பத்தினர்

## யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை நடாத்துக

### அரசிடம் அத்தாவுட கோரிக்கை

(கொழும்பு)

அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்தி சமாதான பேச்சுகள் மூலம் இனப் பிரச்சினையை தீர்க்குமாறு கேகாலை எம். பி. அத்தாவுட செனிவரட்ன அரசை கோரியுள்ளார். தென்னிலங்கையில் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், வடக்கு கிழக்கில் அரசு அர்த்தமற்ற போரை நடத்துகிறது. ஐ. தே. க ஆட்சிக்கு வந்த பின்பே இந் நிலை. இதனால் இளைய சமூகமும், பொருளாதாரமும் அழிகிறது என்றார்.

பெரும்பணம் இதுவரை போருக்கு செலவாகிறது இதனால் பெருமளவு அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ளது இதனால் அரசு போரை நிறுத்தி புலிகளுடன் பேச்சை நடத்த முன்வர வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

## மாகாண முதலமைச்சரால் மேயர் பதவி நீக்கம்

(கொழும்பு)

கொழும்பு மேயர் ரட்ண சிறி ராஜபக்ச மேல்மாகாண சபையினால் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே இவர் நீக்கப்பட்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்டடுள்ள மேயர் ராஜபக்ச ஐ. தே. கவை சேர்ந்தவர் என்பதும் மேல்மாகாண சபை சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலான எதிரணியினரின் ஆட்சியில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஐ. தே. கவில் உள்ள சிலரும் முன்னர் கோரிவந்தனர்.

## இலங்கை

கொள்ளும் ஒரு குற்றப்பத்திரிகை இது என்பது குறிப்பிடத்தக்கது.

1987இல் இலங்கைத் தமிழ் அகதிகள் தமது குடும்பங்களுடன் இணைவதற்கு எதிராக தடைவிதித்ததை அடுத்து அப்போது நீதிஅமைச்சராக இருந்த எறிக் றின்-ஹன்சன் டென்மார்க்கில் பெரும்சர்ச்சைக்குள்ளானார். இவரின் இந்த நடவடிக்கையினால் டென்மார்க் பிரதமர் போல் சுல்லுட்டரின் அரசு கடந்த ஜனவரியில் கலைக்கப்பட்டது. குடும்ப அங்கத்தவர் இணைவதைத் தடுப்பது சட்டவிரோதமான செயல் என்று பாராளுமன்றம் கண்டித்ததை அடுத்தே பிரதமர் தமதுராஜினாமாவைச்சமர்ப்பித்தார். அரசும் கலைக்கப்பட்டது.

இருபத்திநான்கு உறுப்பினர்களைக் கொண்ட குற்றப்பத்திரிகை விசாரணை மன்றின் தலைவரான உச்ச நீதிமன்றப் பிரதமநீதியரசர், முன்னாள் நீதி அமைச்சரின் வழக்கறிஞர்கள் குற்றப் பத்திரிகையைத்தள்ளுபடி செய்யுமாறு சமர்ப்பித்த மனுவை நிராகரிப்பதாக விசாரணை மன்று ஒருமனதாகத் தீர்மானித்திருப்பதாக டென்மார்க் வானொலியில் அண்மையில் கூறியிருந்தார்.

குற்றப்பத்திரிகை டிசம்பர் 7 இல்விசாரணைக்கெடுத்துக்

'தமிழ்கேற்' வழக்கென்று டென்மார்க்கில்பிரபல்யமாகியிருக்கும் வழக்குத் தீர்ப்பை அடுத்தே டென்மார்க் அரசு கலைக்கப்பட்டது என்றும், விசேட குற்றப்பத்திரிகை விசாரணை நீதிமன்றம் அமைப்பது டென்மார்க் அரசியல் யாப்புக்கு விரோதமானது என்றும் முன்னாள் நீதி அமைச்சர் தரப்பு வழக்கறிஞர்களின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட நீதி மன்றத்தின் 12 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏனைய நீதிபதிகள் முன்பு இந்த வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் மோஜென்ஸ் ஹோன்ஸ்லட்டுடன் கூட வேலை பார்த்தவர்கள். ஆகவே வழக்கில் முன்னாள் நீதிபதி எறிக்றின் ஹன்சன் பாரபட்சமற்ற விசாரணையை எதிர்பார்க்க முடியாது என்று மேலும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கு இந்த வருடம் மார்ச்மாதத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. ஜூன் மாதத்தில் தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் நீதி அமைச்சர் இரண்டு வருடச் சிறைத்தண்டனை அல்லது குற்றப்பணம் கட்டும்படி நேரலாம் என்று

## ராஜீவ்காந்தி கொலைவழக்கு; நீதிமன்ற வீதியால் செல்லத் தடை

(சென்னை)

இந்தியமுன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விசாரணை நடைபெறும் பூந்தமல்லி பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வீதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை பூந்தமல்லியில் சிறப்பு ஜெயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தனி கோர்ட்டில்நடந்துவருகிறது.

வழக்கு விசாரணைக்கு இடைஞ்சல் ஏற்படாமலும் பாதுகாப்பு கருதியும் பூந்தமல்லி மெயின் பஜார் வழியாக சாலைப்போக்குவரத்து முழுமையாக மூடப்பட்டுள்ளது எனவும் இந் நகருக்குள் காலை 7 மணி முதல் 9 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 7 மணிவரையிலும் மட்டுமே போக்குவரத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது எனவும் தமிழ் நாட்டு பொலிசார் கூறினர்

கரையான் சாவடி, டிரங்க் சாலை பகுதியை பொலிசார் தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவித்துள்ளனர், இதனால் அப்பகுதிக்குள் அமைந்துள்ள இரு பாடசாலைகளிலும் மூவாயிரம் மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடிவதில்லை என்றும் அத்துடன் இந்த பகுதியில் உள்ள வியாபாரிகளும் அலுவலகம் செல்பவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதேவேளை இப்பகுதியில் போக்குவரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடையைநீக்கி வழமைபோல் போக்குவரத்து நடைபெற அனுமதிக்கும்படி கோரி அப்பகுதி வியாபாரிகள் கடை அடைப்பு செய்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ், மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்றைய போட்டியில் மந்துவில் மரிக்கார் விளையாட்டு கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளது. இப் போட்டி மட்டுவில் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பி. ப. 3. 00 மணிக்கு ஆரம்பமாகும்.

## கிழக்கு தேர்தலில்

ஏனைய தமிழ்க்குழுக்கள் இத் தேர்தலில் சுயேட்சை உறுப்பினர்களாக போட்டியிட முன்வந்துள்ளனர், பெரும்பாலான மக்கள் இவர்களுக்கு அஞ்சுகின்றனர்- வெறுக்கின்றனர் எனக் குறிப்பிட்ட பி. பி ஸி நியமன இறுதித் திகதி இன்றுடன் முடிவடைவதாகவும் குறிப்பிட்டது.

ஐ, தே, கவிற்கு வேட்பாளரை நியமிக்குமாறு தமது தொகுதியாளர்கள் சிலர் மிரட்டப்பட்டதாக தமிழ் எம், பி, ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்,

நியமனம் பெறும் சிலர் முன்பு படையினரிடம் கைதிகளாக இருந்தவர்கள் என இவர்சுட்டிக்காட்டியுள்ளார்,

## அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு பாடசாலை இயங்கிவரும் புதிய உயர்கல்லூரி (ஆரியகுளம் சந்தி)யில் நடைபெறவுள்ளது

## உதைபந்தாட்டம்

யாழ். பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெறும் இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென் அன்ரனீஸ் முதலாவது ஆட்டத்திலும், யாழ் குருநகர் பாடுமீனை எதிர்த்து நாவாந்துறை சென் மேரீசும் இரண்டாவது ஆட்டத்தில் மோதுகின்றன. (24)

## கடற்படையினரின்

விசைப்படகு ஒன்றிலிருந்தே இத் தாக்குதல் நடைபெற்றது.

தொண்டமனாறிலிருந்து வேட்டுக்களை தீர்த்தவாறு சென்றுகொண்டிருந்த கடற்படையினர் இன்பருட்டியில் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலின் போதே படகு சேதமடைந்தது. இப் படகில் தொழிலுக்குச் சென்றிருந்த ...

## மாற்றத்திற்கேற்ப

சித்திட்டங்களையும் மறுபரிசீலிக்கவேண்டும். அரசியல்ரீதியான தீர்வே அவசியமாக இருக்கையில் இராணுவம் அதனை எட்ட உதவுவதாக இருக்கும் என தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திரு. நாகமுத்து இராமநாதன்

(இன்பா பார்மஸி உரிமையாளர் - வவுனியா)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமநாதன் 06-01-1994 இல் காசியில் காலமானார். அன்னார் தெய்வேந்திரராணியின் அன்புக் கணவரும், இன்பராணி (ஜேர்மனி), ரகுநாதன் (ஜேர்மனி), அமிர்தநாதன் (ஜேர்மனி), நிமலநாதன், மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌதமின் அன்புப் பேரனும், திருமதி செல்வரத்தினம், திருமதி பரமேஸ்வரி, திரு. பத்மநாதன், திருமதி இரத்தினலட்சுமி, திருமதி புவனேஸ்வரி, திரு. சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புவனேந்திரராணியின் மைத்துனனும், சரவணபவராஜாவின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12-01-94 புதன்கிழமை வவுனியாவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திரு. க. திருஞானசம்பந்தர்
(மருமகன்)


(7204)

இங்ஙனம்
சகோதரி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

மங்களா குடும்பத்தினர்
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி/8365)

# 4-ம் ஆண்டுநினைவஞ்சலி



## அமரர் தம்பு நடேஸ்

(கொடிகாமம் கண்ணன் கூல்பார் உரிமையாளர்)

மலர்வு:
05-05-1950

தேசதுரோகிகளால்
அழிப்பு:
28-12-1989

**திதி: 1994 - 01 - 12 (புதன்)**

ஆண்டு நான்கு ஆனபோதும்
ஆறாது எம் மனம் உம்மை நினைந்து
அரக்கர் அன்று உம்மை அழித்து
ஆன தென்ன இன்று அவர்க்கு

12-01-94 இன்று இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

பறிகொடுத்து பரிதவிக்கும்
குடும்பத்தினர், உற்றார்,
உறவினர்.

கச்சார்வெளி,
பளை.

(சி-7203)

வானொலியில் அண்மையில் கூறியிருந்தார்.

குற்றப்பத்திரிகை டிசம்பர் 7 இல்விசாரணைக்கெடுத்துக் கொண்ட சிறிது காலத்தில் முன்னாள் அமைச்சரின் வழக் கறிஞர்கள் தமது மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

முன்னாள் நிதி அமைச்சர் இரண்டு வருடச் சிறைத்தண் டனை அல்லது குற்றப்பணம் கட்டும்படி நேரலாம் என்று டென்மார்க் பாராளுமன்றச் சட்டத்திணைக்களப் பேச் சாளர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## யாழ் மாவட்டம்

சகல தனியார் கல்வி நிறுவனங்களுக்கும்

**தனியார் கல்வி நிறுவன ஒழுங்கு விதிகள்**

அச்சிட்டு வழங்கப்படுகின்றன. செலுத்தவேண்டிய சந்தாப்பண நிலுவையுடன் ரூபா (10/-) பத்தும் செலுத்தி 17-01-1994 திங்கட்கிழமை முதல் கீழ்வரும் உங்கள் கோட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள வும்.

1) **யாழ் கோட்டம்**
தனியார் கல்விப் பிரிவு
இல. 19, செம்மணிவீதி, நல்லூர்

2) **மருதனாமடம் கோட்டம்**
வினைல்ஸ் கல்வி நிறுவனம்
சுன்னாகம்

3) **வடமராட்சிக் கோட்டம்**
புலோலி கல்வி நிலையம்
உபயகதிர்காமம்

4) **பண்டத்தரிப்புக் கோட்டம்**
சுப்றா கல்வி நிலையம்
சித்தன்கேணி

5) **தென்மராட்சிக் கோட்டம்**
பொருளாளர்

முக்கிய குறிப்பு எதிர்வரும் 16-01-94 ஞாயிற்றுக் கிழமை கேணல் கிட்டு, லெப். கேணல் குட்டிசிறி உட்பட 10 வீர வேங்கைகளின் வீரச்சாவின் ஓராண்டு நினைவையொட்டி சகல தனி யார் கல்வி நிறுவனங்களும் வகுப்புக்களை ரத்துச் செய்து அன்றைய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி-8368)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

தாக்குதலின் போதே படகு சேதமடைந்தது. இப் படகில் தொழிலுக்குச் சென்றிருந்த ரவிதாஸ், தீபன் ஆகிய இரண்டு மீனவர்களே தப்பித் துக் கொண்டவர்களாவர்

அதேவேளை நேற்று 12-40 மணியளவில் வல்வெட்டித் துறைக்கு வந்த உலங்கு வானூர்தி ஒன்று அப்பகுதிக் குடியிருப்புக்களை வட்ட மிட்டு நோட்டமிட்டவாறு சுலிபர் தாக்குதலை மேற் கொண்டது. (யோ)

## வை-8 விமானங்களை

யின் ஆறுபேர் கொண்ட குழு வினர் எயர் மார்ஷல் டி. எஸ். குணவர்தனா தலைமையில் வை-8 விமானம் தொடர் பாக பேச்சு நடத்த அண்மை யில் சென்றிருந்தது. டிசம்பர் 9 இல் சீனா சென்ற இக்குழு 28 ஆம் திகதி திரும்பியது. இக்குழுவில் விமான தொழில் நுட்ப இயந்திரவியல் இயக் குனர் ஜி. வை. டி. சில்வா வடபகுதி விமானப்படைத் தளபதி ஜெயலத் வீரக்கொடி ஆகியோரும் அடங்கியிருந்த னர். இக் குழுவினர் வை-8 விமானம் பழைய ரகமாக இருப்பது குறித்து சீன தரப் பிடம் விளக்கியதாக தெரிவிக் கப்படுகிறது.

சிறிலங்கா விமானப்படை தற்போது இரு வை-8 விமா னங்களை பயன்படுத்துகிறது ஒன்று விமானப்படை சொந் தப்பாவனையில் வைத்துள் ளது. மற்றையது சீன விமா னப் படையினால் கடனடிப் படையில் வழங்கப்பட்டது. 1992 ஜூலையில் இயக்கச்சி யில் வை-8 விமானம் ஒன்றை விமானப்படைஇழந்ததையடு த்து சீனாவினால் ஒரு விமா னம் இவ்வாறு கடனடிப்படை யில் வழங்கப்பட்டது.

புதியரக வை-8 விமானம் 9 மில்லியன் அமெரிக்க டொலர் முதல் 10 மில்லியன் அமெரிக்க டொலர் வரையில் விலை போகக் கூடியது. சிறி லங்கா விமானப்படை பாவி த்த வை-8 விமானங்களையே குறைந்தளவு விலையில் பெற் றுக்கொள்ள முயற்சித்தது.

கொள்ளவும்.

தகவல்;
திரு. க. திருஞானசம்பந்தர்
(மருமகன்)

(7204)

## திரு. சுப்பர் கந்தையா

காரைநகர் வலந்தலை இலகடியைச் சேர்ந்த சுப் பர் கந்தையா அவர்கள் 13-11-93 அன்று காரை நகரில் காலமானார். அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், நாகரத்தினம், கனகாம்பிகை, கருண பூசணிஅம்மா, லங்காதேவி, கமலாதேவி, புஸ்பதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி, வேலா யுதம், நாகரத்தினம் (சவுதிஅரேபியா) ஆகியோரின் அருமை மாமனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுறோட்,
தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

(7205)

தகவல்;
திருமதி பூரணம் கந்தையா
(மனைவி)

## திருமதி அருளம்மா ஞானப்பிரகாசம் (செல்லம்)

திருமதி அருளம்மா ஞானப்பிரகாசம் 04-01-94 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற மடுத்தீன் ஞானப்பிரகாசம் (பொன்னுத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி டெய்சி சூசைப்பிள்ளை, திருமதி விக்ரோறியா வில்லிஸ்ர னிஸ்லஸ் (இளைப்பாறிய உபஅதிபர் பாசையூர் சென். அன்ரனிஸ் மகாவித்தியாலயம்), அருட்தந்தை எட் மன் மைக்கல் (அ. ம. தி) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களான பசுபதி செல்லையா, பசு பதி இராசையா ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை, பிலிப் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் மாமியும், பெஞ்சமின் இம்மனுவல், திருமதி மேரி இராணி இம்மனுவல், சூசைப்பிள்ளை றெஜினோல்ட், றவிச்சந்திரன், திரு மதி சாந்தினி றவிச்சந்திரன் ஆகியோரின் பேர்த்தி யும், பிரதீபன், தீபா, சோபா, ஜனார்த்தனி, றுக்மா, நேமா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன் னாரின் பூதவுடல் 50 பழைய பூங்கா வீதியிலிருந்து 12-01-94 இன்று புதன்கிழமை பிற்பகல் 3-15 மணி க்கு எடுத்துச் செல்லப்பட்டு, பேராலய திருப்பலி யின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
அருட்தந்தை
எட்மன் மைக்கல் (அ.ம.தி)
(மகன்)

'பிரகாஸ்'
50 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(7206)